<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No CC.No. 92/2024 LW- 10 PW- 6

Name : விஜயபாண்டியன் (புலன் விசாரணை அதிகாரி)

Father's/Husband's Name : அர்ச்சுணன்

Village : சார்பு ஆய்வாளர்

Taluk : செம்பட்டி காவல்நிலையம்

District : திண்டுக்கல்

Age : 40/2025

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 1st day of August 2025

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

2. நான் நத்தம் காவல் நிலையத்தில் எத்தனை ஆண்டுகள் பணியாற்றினேன் என்றால் சுமார் 1 1/2 வருடங்கள் இருக்கும். 2022 முதல் 2024ம் வருடம் வரை பணியாற்றினேன். சம்பவ இடமாக தெரிவிக்கப்படும் இடமானது அம்மன்குளம் தெற்கே உள்ள திண்டுக்கல் – காரைக்குடி சாலை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும், நத்தம் காவல் நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் எவ்வளவு என்றால் ஒரு கிலோ மீட்டர் இருக்கும். இந்த விபரத்தை நான் எனது முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4ல் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையானது மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவல் மூலம் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை, புகார்தாரர் காவல் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. சம்பவம் நடந்து எத்தனை மணி நேரத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் இரண்டு மணி நேரம் கழித்து கொடுக்கப்பட்டுள்ளது. புகார்தாரர் தனது புகார் மனுவில் எதிரி ஓட்டி வந்த இருசக்கர வாகனமானது கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சென்ற போது சம்பவம் நடந்ததாக தெரிவித்துள்ளார் என்றாலும், ஆனால் அவர் தனது முதல் விசாரணையில் இருசக்கர வாகனமானது மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சென்றதாக தெரிவித்துள்ளார் என்றாலும், இதில் எது சரியான விபரம் என்றால் புகாரின் அடிப்படையிலும், எனது விசாரணையின் அடிப்படையிலும் எதிரி ஓட்டி வந்த இருசக்கர வாகனமானது கிழக்கில் இருந்து மேற்காக நத்தத்தில் இருந்து கொட்டாம்பட்டிக்கு செல்லும்போது சம்பவம் நடந்ததாக தெரியவந்தது.

4. நான் இந்த வழக்கில் எத்தனை சாட்சிகளை விசாரித்துள்ளேன் என்றால் 1 முதல் 7 சாட்சிகளை விசாரித்துள்ளேன். 1 முதல் 3 வரையிலான சாட்சிகள் சம்பவத்தை நேரடியாக பார்க்காத சாட்சிகள் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு தான் சம்பவ இடம் சென்று பார்வையிட்டேன். அதனால் நான் சம்பவ இடத்தை 9.00 மணிக்கு பிறகு தான் சென்று பார்வையிட்டேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடம் செல்வதற்கு முன்பே காயம் பட்ட நபர் மருத்துவமனைக்கு சென்று விட்டார் என்றால் சரிதான்.

5. மருத்துவமனையில் இருந்து காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளதால் காவல் நிலையத்திற்கு அவ்வாறு தகவல் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. A.R. பதிவில் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது என்றாலும், நான் பொய்யாக இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தால் காயம்பட்ட நபரை தீனதயாளன் என்ற நபர் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தீனதயாளன் என்பவரை நான் இந்த வழக்கில் விசாரணை செய்யவில்லை என்றால் அவர்

சாட்சியம் அளிக்க முன்வராத காரணத்தினால் விசாரிக்கவில்லை. மேற்படி நபர் சாட்சியமளிக்க முன்வரவில்லை என்ற விபரத்தை நான் எனது பொது நாட் குறிப்பில் குறிப்பிடவில்லை என்றாலும் அதே போல் எனது புலன் விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. அ.சா.ஆ.4 ஆவணத்தில் காலம் 3(C)ல் பொது நாட்குறிப்பு பதிவு விவரம் எண் குறித்து தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.4 ஆவணத்தில் காலம் 14ல் புகார்தாரருக்கு முதல் தகவல் அறிக்கை நகல் கொடுக்கப்பட்டதாக கையொப்பம் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். புகார் ஆனது 9 மணிக்கு தரப்பட்டதாக அ.சா.ஆ.1 ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தாலும் மேற்படி காலத்திற்குள் அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 9:00 மணிக்குள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்பதால் தான் என்னால் முதல் தகவல் அறிக்கையை உரிய காலத்திற்குள் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க இயலவில்லை என்றாலும் 14 நாட்கள் கால தாமதம் ஆகி உள்ளது என்றாலும் சரியல்ல.

7. பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆவணத்தை யார் எழுதியது என்றால் காவலர் எழுதினார் அவர் யார் என்று தற்பொழுது ஞாபகம் இல்லை. அ.சா.ஆ.6 ஆவணத்தை எழுதிய காவலரை இந்த வழக்கில் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.5 மாதிரி வரைபடத்தையும் அதே காவலர்தான் வரைந்துள்ளார் என்றால் சரிதான். அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆவணத்தை தயார் செய்த காவலரை விசாரணை செய்தால்தான் மேற்படி ஆவணம் எப்பொழுது தயார் செய்யப்பட்டது என்ற விவரம் தெரியவரும் என்றால் சரியல்ல. 11.11.2023-ம் தேதி காலை சுமார் 6 மணிக்கு என்னுடன் வந்த காவலர் சம்பவ இடத்தில் வைத்து மேற்படி ஆவணங்கள் நான் சொல்ல சொல்ல தயார் செய்யப்பட்டது. பார்வை மகசரில் கண்ட சாட்சிகள் காவலர்கள் தான் காலை 10 மணி அளவில்

சம்பவ இடம் வந்து வரைபடம் வரைந்ததாக தெரிவித்துள்ளதால் நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றால் சரியல்ல.

8. அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆவணங்களை நான் தயார் செய்யவில்லை என்றாலும் நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவ இடம் சென்று நான் புலன் விசாரணை செய்யாத காரணத்தினால் தான் இந்த வழக்கில் இறந்த நபர் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சாலையை கடக்கும்போது விபத்தில் காயமுற்றாரா அல்லது வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சாலையை கடக்கும் போது விபத்தில் காயமுற்றாரா என்ற விபரத்தை சரியாக குறிப்பிடவில்லை என்றாலும், அதனால் புலன் விசாரணை சரியாக நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல.

9. அம்மன் குளத்தின் தென்புற சாலை பள்ளமாகவும், கிழக்கே செல்லும்போது சற்றே வளைந்து சற்று மேடாக செல்கிறது என்றால் சரிதான். அம்மன் குளத்திற்கு தெற்கு பக்கத்தில் உள்ள சாலை கிழக்கு பக்கமாக செல்லும் மெய்யம்பட்டி வரை உள்ள சாலையில் விளக்குகள் இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சாலையின் தென்புறத்தில் கணபதி உணவகம் உள்ளதாக அ.சா.ஆ.1ல் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.ஆ.5ல் சுபஸ்ரீ உணவகம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் தனது புகார் மனுவில் தனது தாயார் வேலைக்கு செல்லும் போது விபத்து நடந்ததாக தெரிவித்துவிட்டு முதல் விசாரணையில் வேலை விட்டு திரும்பும் போது விபத்து நடந்ததாக முரண்பட்டு தெரிவித்துள்ளதால் இது குறித்தும் சரிவர புலன் விசாரணை செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

10. இவ்வழக்கில் இறந்து போன நபர் உணவகத்தில் வேலை பார்த்தாரா என்று புலன் விசாரணை செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, அவர் அங்கு தான் வேலை செய்தார். அதற்காக சாட்சி யாரும் விசாரிக்கப்பட்டார்களா என்றால் சாட்சிகள் எனது விசாரணையில் தெரிவித்துள்ளார்கள். உணவகத்தின் உரிமையாளராயோ அல்லது அதில் வேலை பார்க்கும் நபர்களையோ விசாரணை

செய்யவில்லை என்றால் சரிதான். நான் மேற்படி நபர்களை விசாரித்து இருந்தால் தான் இறந்து போன நபர் உண்மையில் உணவகத்தில் வேலை செய்தாரா என்ற விபரம் தெரியவரும் என்பதால் புலன் விசாரணை சரிவர நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

11. சம்பவ தினத்தன்று வாகனம் கைப்பற்றப்படவில்லை என்றால் காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. யாரால் வாகனம் காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது என்றால் தற்போது ஞாபகம் இல்லை. யார் ஒப்படைத்தார் என்ற விபரத்தையும் அவரை விசாரணை செய்யாததால் புலன் விசாரணை பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.ஆ.5 ஆவணத்தில் வாகனம் எந்த இடத்தில் கிடந்தது என்றும், காயம்பட்ட நபர் எந்த இடத்தில் இருந்தார் என்ற விபரத்தையும் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல, சம்பவம் நடந்த இடத்தில் தான் வாகனமும், அடிபட்ட நபரும் இருந்தார் என்பது விசாரணையில் தெரிந்தது. கண்ணுற்ற சாட்சி யாரையும் இந்த வழக்கில் விசாரணை செய்யப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் PSO 582 விதி பின்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

12. எதிரி இருசக்கர வாகனத்தை அதிவேகமாக ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்பதும், அதில்தான் செல்லம்மாள் என்பவர் காயமுற்று இறந்துவிட்டார் என்பதும் தவறு என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று அதிக மழை பெய்த காரணத்தால் சம்பவ இடத்தை அறுதியிட்டு சொல்ல இயலாது என்பதால் அ.சா.ஆ.5 ஆவணத்தில் கண்ட சம்பவ இடம் தவறானது என்றால் சரியல்ல. சாலையின் அகலம் குறித்த விபரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் வாகனங்கள் வேகமாக செல்ல வாய்ப்பு இல்லை என்றாலும், சம்பவ சமயம் அதிக மழை பெய்த காரணத்தால் அதிவேகமாக வாகனம் செல்ல வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல.

13. அ.சா.ஆ.5 ஆவணத்தில் காயமுற்ற நபர் எந்த திசையில் கிடந்தார் என்ற விபரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். காயமுற்ற நபரின் ஆடை

இவ்வழக்கில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.08.01 10:07:39 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்